07-05-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை**

**தொடக்கவுரையாடல் : சி. கா. செந்திவேல்**

1847 நவம்பர் மாதத்தில் லண்டனில் கூடிய கம்யூனிஸ்ட் கழகத்தின் காங்கிரஸ் மேற்படி அறிக்கையினைத் தயாரிக்கும்படி மார்க்சையும் ஏங்கல்சையும் பணித்தது. அதன்படி கம்யூனிஸ்ட் கட்சிக்குரிய தத்துவார்த்த நடைமுறை வேலைத்திட்டத்தை உள்ளடக்கிய அறிக்கையினை அவர்கள் இருவரும் தயாரித்தனர். இவ்வறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு 1848 பெப்ரவரியில் ஜேர்மன் மொழியில் வெளிவந்தது. 1850 இல் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு லண்டனில் வெளிவந்தது.

இவ்வறிக்கை நான்கு அத்தியாயங்களை உள்ளடக்கியதாகும்.

1. முதலாளிகளும் பாட்டாளிகளும்
2. பாட்டாளிகளும் கம்யூனிஸ்டுக்களும்
3. சோசலிச கம்யூனிச இலக்கியம்
4. தற்போதுள்ள பற்பல எதிர்க்கட்சிகள் குறித்த கம்யூனிஸ்டுக்களின் நிலை.

**முதலாளிகளும் பாட்டாளிகளும்**

முதலாவது விடயம், சமூக வளர்ச்சிப்போக்கில் மனிதகுலம் உருவாகி வளர்ந்து வந்த சூழலில் வரலாற்றில் நிலப்பிரபுத்துவ அமைப்பில் முதலாளித்துவம் தோன்றி வளர்ந்ததை மிகக் கட்டிறுக்கமாக எடுத்துக் காட்டுகிறது.

சமுதாய அரங்கில் முரண் அற்றதாய் விளங்கும் பொருள் முதல் வாதம், இயங்கியல், வர்க்கப்போராட்டம், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரம் ஆகியவற்றை விளக்குகிறது.

இங்கே நிலப்பிரபுத்துவத்தை வீழ்த்துவதில் முதலாளித்துவம் ஆற்றிய பங்களிப்பை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. அது எவ்வாறு நிலப்பிரபுத்துவ உறவுகளையும் மதத்தோடு அது கொண்டிருந்த பிணைப்புக்களையும் உடைத்தெறிந்தது என்பதனை விளக்குகிறது.

இங்கே, எவ்வாறு சொத்துடைமையானது நவீன தொழில் வளர்ச்சி காரணமாக மூலதனமாக மாறித் தொழிலாளர்களை வெறும் கூலி உழைப்பாளர்களாக மாற்றி இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டப்படுகிறது.


ஈவிரக்கமற்ற முதலாளித்துவச் சுரண்டலையும் கட்டற்ற வர்த்தகம் உலக அளவில் விரிவடைந்து வருவதையும் சுட்டிக்காட்டுகிறது.

முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்தை வீழ்த்துவதில் புரட்சிகரப் பாத்திரத்தை வகித்துவந்தது. ஆனால் விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சியானது முதலாளிய உற்பத்தியை அபரிமிதமாக்கியதுடன் உலகளாவிய அளவிலும் வளர்த்தெடுத்தது. அத்துடன் உள்நாடுகளில் ஒருங்கிணைந்த சந்தையையும் வெளிநாடுகளில் சுரண்டலையும் வளங்களைக் கொள்ளையிடுவதையும் நோக்கி இட்டுச்சென்றது.

அத்துடன் முதலாளி வர்க்கம் தனக்குச் சவக்குழி தோன்றும் வர்க்கமொன்றினையும் தோற்றுவித்துக்கொண்டது.

ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் என்ற வர்க்கப்போராட்டத்தினை மேலும் தீவிரமடைய வைத்தது. வர்க்கப்போராட்டம் மனிதகுல வரலாற்றில் இருந்துவந்த ஒன்றே ஆகும். .

மிகுதி அடுத்த பக்கம்



யசுனாரி கவபட்டா

**யசுனாரி கவபட்டா** (川端 康成 Kawabata Yasunari, ஜூன் 14, 1899 - ஏப்ரல் 16, 1972)

நோபல் பரிசு பெற்ற யப்பானிய நாவலாசிரியர் ஆவார். சாகாவில் பிறந்த இவர் சிறுவயதிலேயே நெருங்கிய உறவினர்கள் அனைவரையும் இழந்தவர். செய்தியாளராகவும் பணியாற்றியுள்ளார். 1968 இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற முதல் யப்பானியரானார். யப்பானிய இலக்கியங்களை ஆங்கிலத்துக்கும் பிற மேலைத்தேய மொழிகளுக்கும் மொழிபெயர்ப்பதில் குறிப்பிடத்தக்க ஊக்குவிப்பாளராக இருந்தார். 1972 இல் தற்கொலை செய்து கொண்டார். தற்கொலைக்கான காரணம் எதுவும் தெளிவாகத் தெரியவரவில்லை.

**இவரது படைப்புக்கள் சிலவற்றின் ஆங்கிலத் தலைப்புக்கள் :**

*The Dancing Girl of Izu*
*Scarlet Gang of Asakusa*
*Snow Country*
*The Master of Go*
*Thousand Cranes*
*The Sound of the Mountain*
*The Lake*
*The House of the Sleeping Beauties*
*The Old Capital*
*Beauty and Sadness*
*One Arm*
*Palm-of-the-Hand Stories*

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

**கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை**

**முன்பக்கத் தொடர்ச்சி..**

பாட்டாளிகளும் கம்யூனிஸ்டுக்களும்

பாட்டாளி வர்க்கத்திற்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையில் உள்ள உறவு மிகப்பரந்த ஒன்றாகும். அவர்கள் சுரண்டப்படும் வர்க்கம் என்பதனாலும் ஒடுக்கப்படும் வர்க்கம் என்பதினாலும் அவர்கள் சகல தடைகளையும் மீறி உலகப் பாட்டாளி வர்க்கத்துடனும் மக்களுடனும் உடன்படுகிறார்கள். அவர்களோடு கம்யூனிஸ்டுக்கள் பிணைப்புக் கொண்டிருக்கிறார்கள்.

பொதுப்பட கம்யூனிஸ்டுக்கள் சகல சொத்துடைமைகளையும் ஒழிக்க நிற்கிறார்கள் என்று கூறப்படுவது தவறு. முதலாளித்துவச் சொத்துடைமையை ஒழிக்க நிற்கிறார்கள்.

மூலதனம் கூட்டுச் செயற்பாட்டினால் இயங்குவதாகும். எல்லோரினதும் சமூக ரீதியான பங்களிப்பாலேயே அதனை இயங்க வைக்க முடியும். எனவே மூலதனம் தனியாரின் சக்தி அல்ல.

சுரண்டலையும் சொத்துடைமையையும் ஒழிப்பதையே கம்யூனிஸ்டுக்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர்.

பாட்டாளி வர்க்கத்தின் அதிகாரம் நிலைநாட்டப்பட்டு சொத்துடைமை யாவும் பொதுவுடைமையாக்கப்பட்டு பாட்டாளி வர்க்கம் முதன்மை இடத்தைப் பெறுகிறது.

சோசலிச, கம்யூனிச இலக்கியம்

1. பிற்போக்கு சோசலிசம்

அ. பிரபுத்துவ சோசலிசம்

முதலாளித்துவத்திடம் தோல்விகண்ட நிலப்பிரபுத்துவ வாதிகள் தொழிலாளர்களுக்காகப் பரிந்து பேசியதையே பிரபுத்துவ சோசலிசம் எனச் சுருக்கமாகக் கூறலாம். இதனோடு இணைந்ததே கிறிஸ்துவ சோசலிசம்.

ஆ. குட்டிமுதலாளித்துவ சோசலிசம்

முதலாளியத்தின் தோற்றத்தோடு உருவாகிய இக் குட்டி முதலாளி வர்க்கம், முதலாளித்துவத்திற்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

**தேசிய கலை இலக்கியப் பேரவை : தொடக்கமும் செயற்பாடுகளும்**

**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )**

தேசிய கலை இலக்கியப் பேரவையை தொடங்கவேண்டி இருந்ததன் வரலாற்றுப் பின்புலம்.

பேரவையின் தொடக்ககால உறுப்பினர்களும் ஆதரவு தந்தோரும்

பேரவை தொடங்கப்படவேண்டியதன் நோக்கம்.

பேரவையின் சாதனைகள், செயற்பாடுகள்

இதழ் வெளியீடுகளும் நூல் வெளியீடுகளும்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைகளின் போது அதனை பேரவை எதிர்கொண்ட விதம்

பேரவையின் வரலாற்றில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள்.

# பீச்சாங்கை

எது சோத்தாங்கை
எது பீச்சாங்கை
மலம் அள்ளும்
தோட்டித் தாய்க்கு..?

'ஆசிட்' ஊற்றத்
தெரிந்தவள்தான்
ஆனாலும் அரசியலில்
அவளில்லை..!

கழிப்பறைகளில்தான்
வேலை என்றாலும்
கழிக்கும் வேலை மட்டும்
அவளுக்கு கழிப்பறைகளில்
கிடையாது..!

மூக்குப் பிடிக்கத்
தின்று கழித்ததை
மூக்கை பிடிக்காமல்
வெளியேற்றுபவள்..!

சோற்றில்
கை வைப்பதற்காக
தன்
சோத்தாங்கையை
இழந்தவள்..!

அத்தனை
ஷாஜகான்களும்
அவளுக்காய் கட்டியது
'பீங்கான் ' தாஜ்மஹால்தான்..!



எந்த ஒரு மிருகத்தின்
கழிவைக் கூட
மற்றொரு மிருகம்
அகற்றும் அவலமில்லை
மனித மிருகத்தை தவிர..!

அவளுக்காய்
திறக்கும் ஒரே கதவு
கழிப்பறையில்
மட்டும்தான்
இருக்கிறது..!

அவள்
தேடிக்கொண்டேயிருக்கிறாள்
நம் கழிவுகளில்
தொலைந்துபோன
அவள் வாழ்வை
மட்டுமல்ல,
மனிதர்களையும்தான்..!

-யோவ்

மார்ச் 2007 - ல் வெளியான யோவ் -ன் பீச்சாங்கை கவிதை தொகுப்பிலிருந்து.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

BY NC SA